அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :127/2017
தேதி : 01/11/2017

## விவசாயத்தை மாநிலப் பட்டியலில் இருந்து, மத்தியப் பட்டியலுக்கோ, பொதுப் பட்டியலுக்கோ மாற்றக்கூடாது.

### அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத்தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை

“நிதி ஆயோக்” அமைப்பின் உறுப்பினர் ரமேஷ் சந்த், சமீபத்தில் “மாநிலப் பட்டியலில் உள்ள விவசாயத்தை, மத்தியப்பட்டியலுக்கோ, பொதுப்பட்டியலுக்கோ மாற்ற வேண்டும் என்று ஆலோசனை அளித்துள்ளார்.

இதை நாங்கள் விவாதிப்பதைவிட வன்மையாக கண்டிக்கிறோம். மேலும், மத்திய அரசு, இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

‘தேசிய விவசாயக் கொள்கை’ என்று பொதுவாக வகுக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், விவசாயத்தின் தன்மை, சூழ்நிலை, சாகுபடி முறை பயிர் வகைகள் போன்றவை மாநிலத்திற்கு மாநிலம், ஒரு மாநிலத்தின் மாவட்டத்திற்கு மாவட்டம், ஒரு மாவட்டத்தின் பகுதிக்குப் பகுதி மாறுபடுவதாகும்.

இப்படி மாறுபட்ட சூழ்நிலைக் கொண்ட விவசாயத்தை, நாட்டின் கடைக்கோடியில் இருந்து கொண்டு ஒரு சிலர் மட்டுமே தீர்மானித்துவிட முடியாது. அந்தந்தப் பகுதிகளில் உள்ளவர்கள் மட்டுமே தீர்மானிக்க முடியும். அதிலும் விவசாயிகளுக்கு அதிகாரம் வழங்கி அவர்கள் முடிவெடுத்து அந்தந்த மாநிலங்கள் அவற்றைச் செயல்படுத்தும் நிலை இருந்தால் தான், நாடு முழுவதும் விவசாயத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சி குறித்து தெரியவரும்.

உலக வர்த்தக நிறுவனத்தின் கட்டுப்பாடுகளுக்கும், நிபந்தனைகளுக்கும் சம்மதித்து, விவசாயத்திற்கான மானியத்தைக் குறைப்பது, ஊக்கத்தொகைகளை படிப்படியாக நிறுத்துவது என்று மத்திய அரசு முடிவெடுத்தால், அது இந்தியப் பொருளாதார வளர்ச்சியை பின்னுக்குத் தள்ளிவிடும் செயலாக

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அமைந்துவிடும் என்பதை விவசாயிகள் சார்பில் ஒரு எச்சரிக்கையாகவே மத்திய அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மேலும், 'விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவேன்' என்று பிரதமர் மோடி அளித்திருக்கும் உறுதி, வெறும் கனவாகவே போய்விடும் என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

கல்வித்துறையை பொதுப்பட்டியலில் சேர்த்ததன் மூலம் சமீபத்தில் NEET தேர்வு முறையால், தமிழகத்திற்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதிகளைப் பார்த்துக் கொண்டு வருகிறோம். இந்த நிலைமை விவசாயத்திற்கும் வந்துவிடக் கூடாது.

ஏற்கனவே விளை நிலங்களில், எரிவாயு திட்டம், ஹைட்ரோ கார்பன் திட்டம் என்று எதிர்ப்புகளையும் மீறி நடைமுறைப்படுத்தி வரும் மத்திய அரசு, முழு அதிகாரமும் தன்னிடத்தில் இருந்தால், மொத்த விவசாயத்திற்கும் மூடுவிழா செய்துவிடும் என்று அச்சப்பட வேண்டி வரும்.

மேலும், மாநிலம் சம்பந்தப்பட்ட அதிகாரம் ஒவ்வொன்றையும் மத்திய அரசு தனது வசம் மாற்றிக்கொள்ளுமேயனால், அது நமது நாட்டின் கூட்டாட்சித் தத்துவத்தை நிலைகுலையச் செய்துவரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, விவசாயம் என்பது மாநிலங்களின் பட்டியலில் மட்டுமே இருக்க வேண்டும், விவசாயத்திற்கென்று மாநிலங்களுக்கு கூடுதல் நிதி மத்திய அரசு வழங்க வேண்டும், மாநிலங்களுக்கு விவசாயத்துறை சீர்திருத்தங்கள் தொடர்பாக தொடர்ந்து அறிவுறுத்திக் கொண்டு, அவற்றைக் கண்காணிக்கும் பணிகளைச் செய்து வந்தாலே போதும் என்பதை விவசாயிகள் சார்பிலும், சமத்துவ மக்கள் கட்சி சார்பிலும் வலியுறுத்தி தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com